


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.5.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய "தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை நூல் வெளியீட்டு விழாவில், "எங்கள் கல்வி எங்கள் உரிமை என்ற விழிப்புணர்வு பலகையில் கையொப்பமிட்டார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.5.2025) சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி எழுதிய "தேசிய கல்விக் கொள்கை 2020 எனும் மதயானை நூலினை வெளியிட்டார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, மத்திய பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் நாடாளுமன்ற கல்வி நிலைக்குழுத் தலைவர் திக்விஜய சிங், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உச்ச நீதிமன்ற மேனாள் நீதிபதி . கோபால கவுடா, இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மேனாள் இயக்குநர் டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை, இந்து குழுமத்தின் இயக்குநர் ராம், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வாரியத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# கல்வியையும் காவிமயமாக்குவதற்கு கொண்டு வந்ததுதான் தேசிய கல்விக் கொள்கை!

## நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல்பக்கத்தொடர்ச்சி

வகையில் துணிச்சலோடு இந்தப் புத்தகத்தை எழுதியிருக்கிறார்! ஆளும் கட்சியோ அல்லது எதிர்க்கட்சி வரிசையோ, என்றைக்கும் கொள்கையை விட்டுத்தர மாட்டோம்; தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு குரல் கொடுப்போம் என்பதற்கான அடையாளம்தான் இந்த புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சி! "தேசியக் கல்விக் கொள்கை 2020 எனும் மத யானை!" புத்தகத்தின் தலைப்பே மொத்த கருத்தையும் சொல்லிவிடுகிறது!

**புதிய கல்விக் கொள்கையை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது!**

இப்படியொரு கல்விக் கொள்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு உருவாக்கியபோதே "புதிய கல்விக் கொள்கை என்ற மதயானை தமிழகத்துக்குள் புகுந்து, கல்வியில் சிறந்த தமிழ்நாட்டை நாசப்படுத்திடவோ, காலங்காலமாக நாம் போற்றி வரும் சமூகநீதி மற்றும் சமநீதிக் கொள்கைகளுக்கு கேடு ஏற்படுத்திடவோ அனுமதிக்கக் கூடாது வருமுன் காப்பதே அறிவுடைமை" என்று தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கே அறிக்கையாக வெளியிட்டார்!

கலைஞரின் வரிகளையே புத்தகத்தின் தலைப்பாக ஆக்கியிருக்கிறார் நம்முடைய மகேஸ் அவர்கள். இன்றைக்கு நாடு இருக்கின்ற நிலைக்கு மிக அவசியமான புத்தகம் இது! ஒன்றிய பா.ஜ.க. அரசைப் பொறுத்தவரைக்கும், எல்லாவற்றையும் காவிமயமாக்க வேண்டும்! முதலில் கல்வியை காவிமயமாக்க வேண்டும்! அதற்காக கொண்டு வந்ததுதான் இந்த தேசியக் கல்விக் கொள்கை! அதனால்தான், நம்முடைய அன்பில் மகேஸ் அவர்கள், இந்தப் புத்தகத்தின் மூலமாக "மதவாதம் உருவாக்கும் அழிவுப் பாதையில் நாம் செல்லப் போகிறோமா? நம் பிள்ளைகளின் வாழ்வை வளமாக்கும் சமூகநீதிப் பாதையை நோக்கிச் செல்லப் போகிறோமா?" என்ற மிக முக்கியமான கேள்வியை இந்த நாட்டை நோக்கி அவர் எழுப்பியிருக்கிறார். இதை ஒரு அமைச்சராக மட்டும் அவர் எழுதவில்லை. "சமூகநீதியை அடித்தளமாக கொண்டு உருவான தமிழ்நாட்டின் கல்விக் கூடத்தில் படித்து உருவான ஒரு இளைஞனாக இந்த நூலை எழுதி இருக்கிறேன்" என்று அவர் சொல்லி இருக்கிறார்.

**தன் கடமையை சிறப்பாக செய்திருக்கிறார் தம்பி மகேஸ்!**

என்னைப் பொறுத்தவரைக்கும், தமிழ்நாட்டின் இளைஞனாக இந்திய நாட்டு குடிமகனாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டனாக, தன்னுடைய கடமையை சிறப்பாக செய்திருக்கிறார் தம்பி மகேஸ் அவர்கள்!

இந்தப் புத்தகத்தில் நாம் ஏன் சமூகநீதிப் பார்வையோடு தேசியக் கல்விக் கொள்கையை எதிர்க்கிறோம் என்று விரிவாக எழுதியிருக்கிறார். பா.ஜ.கவின் திட்டங்கள், அதன் செயல்பாடுகள், அதன் எதிர்கால எண்ணங்கள் இதையெல்லாம் பார்த்துத்தான் தேசியக் கல்விக்



**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் யானையை அடக்கும் அங்குசத்தை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கிய காட்சி!**

கொள்கையை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று திட்டவட்டமாக சொல்கிறோம்! எல்லோரும் படிக்க வேண்டும் என்று சொன்னால், அது நம்முடைய திராவிட மாடல்! இன்னார் மட்டும்தான் படிக்க வேண்டும் என்று சொன்னால், அது பா.ஜ.கவின் காவி மாடல்! "எல்லார்க்கும் எல்லாம்" என்று சொன்னால், அது நம்முடைய திராவிட மாடல் கருத்தியல்! "எல்லாம் ஒருவர்க்கே" என்று சொன்னால், அது ஆரிய கருத்தியல்! இதுதான் ஈராயிரம் ஆண்டுகளாக இந்தச் சமூகத்தில் நடந்து கொண்டு இருக்கின்ற போர்!

**நம் இனத்தின் உயர்வுக்கு கல்விதான் அடித்தளம்!**

இன்றைக்கு நம்முடைய உயர்வுக்கும், மேன்மைக்கும் அடித்தளமாக இருக்குறதே கல்விதான்! நீதிக்கட்சி காலம் தொடங்கி, நம்முடைய போரை கல்விக் கூடங்கள் எனும் களத்தில்தான் நாம் இருந்து கொண்டிருக்கிறோம்!

அறிவுதான் நம்முடைய ஆயுதம்! இன்றைக்கு, கல்விக்குத் தடை போடும் ஒன்றிய கல்விக் கொள்கைக்கு எதிராக நம்முடைய திராவிட மாடல் அரசு போர்வாளை சுழற்றிக் கொண்டிருக்கிறது! இந்தப் போர் ஏன் முக்கியமானது என்றால், தேசியக் கல்விக் கொள்கை இடஒதுக்கீட்டை சிதைத்துவிடும். இடஒதுக்கீடு இருக்கின்ற வரைக்கும்தான், ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு கிடைக்கும்! பன்முகப் பண்பாட்டை N.E.P. தகர்த்துவிடும்.

**சமஸ்கிருத பண்பாடு கொண்ட ஒற்றை தேசியத்தை கட்டமைக்க முயற்சி!**

75 ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்ட ஒருமைப்பாட்டைச் சிதைத்து, சமஸ்கிருத பண்பாடு கொண்ட ஒற்றை தேசியத்தை கட்டமைப்பதுதான் அவர்களுடைய ஒரே

## தேசிய கல்விக் கொள்கை இட ஒதுக்கீட்டை சிதைத்துவிடும்!

நோக்கம்! தேசியக் கல்விக் கொள்கையால் சமஸ்கிருதம் வளரும் என்று சில நாட்களுக்கு முன்னால், உள்துறை அமைச்சராக இருக்கக் கூடிய திரு. அமித்ஷாவே சொல்லி இருக்கிறார். எது நடக்கும் என்று நாம் தொடர்ந்து எச்சரித்தோமோ, அதை உள்துறை அமைச்சரே உறுதி செய்திருக்கிறார். தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகள் அனைத்தையும் அழிக்கும் முயற்சி இது! இதை தடுக்க ஒரே வழி, கல்வியை மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவதுதான். அதற்கான போராட்டத்தை நாம் தீவிரப்படுத்த வேண்டும்! பாடத்திட்டம் வகுப்பதிலும், கற்க வேண்டிய மொழிகளை முடிவு செய்வதிலும் மாநிலங்களின் விருப்பத்திற்கு மாறாக ஒன்றிய அரசு திணிப்பு நடவடிக்கையில் இறங்கி வருகிறது.

**தேசிய கல்விக் கொள்கையால் அனைவருக்குமான கல்வி எட்டாக் கனியாகிவிடும்!**

கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றவில்லை என்றால், கல்வி என்பது அனைவருக்கும் எட்டாக் கனியாக மாறிவிடும்! தடுப்புச் சுவரை எழுப்பி எழுப்பி, பலரையும் பாதித் தூரத்திலேயே தடுத்து, கல்விச் சாலைக்கு வெளியே நிறுத்தி விடுவார்கள். இதைப் பற்றி கடந்த 2022ஆம் ஆண்டு காந்தி கிராமம் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா - அந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு பிரதமர் அவர்கள் வருகிறார். அப்போது அவரிடம் நேரடியாகவே நான் வலியுறுத்தி இருக்கிறேன். மாநிலத்துக்கு மாநிலம் மாறுபடக்கூடிய பண்பாடு இருக்கின்ற நாட்டில், குழந்தைகள் எந்த மொழியில் படிக்கவேண்டும் எந்த பாடத்திட்டத்தில் படிக்கவேண்டும் என்று முடிவு செய்கின்ற அதிகாரம் மாநில அரசுகளுக்குத்தான் இருக்கவேண்டும்! எனவே, கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரும் வரை நம்முடைய போராட்டம் தொடர வேண்டும். அதற்கு தம்பி அன்பில் மகேஸ் அவர்கள் எழுதியுள்ள இந்த நூல் ஊக்கமளிக்கிறது.

அதுமட்டுமல்லாமல், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளவில்லை என்று ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்கு தரவேண்டிய இரண்டாயிரத்து 152 கோடி ரூபாயை தராமல் முரண்டு பிடிப்பதை பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும்!

**கல்வி நிதியைப் பெற உச்சநீதிமன்றத்தில் - வழக்கு!**

இங்கே இருக்கின்ற மாண்புமிகு திக் விஜய சிங் அவர்கள் உள்ளடக்கிய நாடாளுமன்றக் குழுவே பரிந்துரைத்திருக்கிற நிதிதான் அது! மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சேர வேண்டிய அந்த நிதியை தங்களுடைய 'Petty Politics'ற்காக ஒன்றிய அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது.

இதற்கு எதிராக, நிச்சயமாக, உறுதியாக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரத்தான் போகிறது! எப்படி, நாட்டிற்கே வழிகாட்டும் தீர்ப்புகளைப் பெற்று, இன்றைக்கு இந்திய நாட்டின், மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாத்து இருக்கிறோமோ, அதே போல, இந்த வழக்கிலும் வெற்றி பெறுவோம் என்று நான் நம்புகிறேன்.

**தம்பி மகேஸ் பொய்யாமொழியை மீண்டும் மீண்டும் வாழ்த்துகிறேன்!**

நிறைவாக நான் சொல்ல விரும்புவது, தம்பி அன்பில் மகேஸ் – அன்பில் அறிவில் ஆற்றலில் பண்பில் பாசத்தில் பேச்சில் என்ற அந்த வரிசையில், இப்போது எழுத்திலும் வெற்றி பெற்றிருக்கிறார் மாண்புமிகு அமைச்சர் என்னுடைய நூலாசிரியருமான தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி. எனவே, அவரை மீண்டும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### சென்னை வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர்

## என்.டி.சேகர் இல்லத் திருமண வரவேற்பு விழா!

**ஆர்.எஸ்.பாரதி – டி.கே.எஸ்.இளங்கோவன் – அன்பகம் கலை – பி.கே.சேகர்பாபு – - ஆர்.டி.சேகர் – மாதவரம் எஸ்.சுதர்சனம் – இரா. கிரிராஜன் -– கலாநிதி வீராசாமி - –இரா.நரேந்திரன் வாழ்த்துகின்றனர்!**

*சென்னை, மே 18-*

*சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி 34(அ) வட்ட முன்னாள் செயலாளரும், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளருமான என்.டி.சேகர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (18.05.2025) மாலை 06.00 மணியளவில், சென்னை-37, முகப்பேர், கோல்டன் ஜார்ஜ் நகர், டி.என்.இ.பி. ரோடு, எண்.6-ல் அமைந்துள்ள "எஸ்.கே.வி. மஹாலில்" நடைபெற உள்ளது.*

*இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக துணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம், மாநில சட்ட திருத்தக் குழுச் செயலாளர் இரா. கிரிராஜன் எம்.பி., கலாநிதி வீராசாமி எம்.பி. , மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் இரா.நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.*

*மேலும் இவ்விழாவில் சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் வடக்குப் பகுதி செயலாளர்கள், மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழகத்தின் நிர்வா கிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர், கழக தோழர்கள், சுற்றத்தார்கள், நண்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

---

### பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமை! டி.ஆர். பாலு எம்.பி– அமைச்சர் தா.மோ அன்பரசன் ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை

## பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்த ஆலோசனை கூட்டம்

**மீ.அ. வைத்தியலிங்கம், எஸ்.ஆர். ராஜா, ரபி அகமது பங்கேற்பு! இ.ஜோசப் அண்ணாதுரை, பெர்னார்ட் அறிக்கை**

பல்லாவரம் மே 18

பல்லாவரம் சட்டமன்றத் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2)கலந்த ஆலோசனை கூட்டத்தில் பல்லாவரம் வடக்கு பகுதி சேர்ந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கழக நிர்வாகிகள் மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி சேர்ந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்த ஆலோசனைக் கூட்டம் இன்று 18–5–2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி அளவில் பல்லாவரம் 200 அடி சாலையில் உள்ள அருள் முருகன் டவர்ஸ் திருமண மண்டபத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளரும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ். பெர்னார்ட் வரவேற்புரையில் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் மண்டல தலைவருமான வே. கருணாநிதி பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவருமான இ.ஜோசப் அண்ணாதுரை பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் த.ஜெயக்குமார் புனித தோமையார் மலை ஒன்றிய செயலாளர் ஜி. கே.ரவி ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கலந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக நாடாளுமன்ற மக்களவை குழு தலைவர் டி. ஆர். பாலு எம்.பி காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள்.

மேலும் கழகத் தீர்மானக் குழு செயலாளர் மீ. அ. வைத்தியலிங்கம் தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ராஜா பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ரபி அகமது தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் தாம்பரம் மாநகர துணை செயலாளர் இரா. நரேஷ் கண்ணா தாம்பரம் மாநகர துணை செயலாளர் பொன். சதாசிவம் தாம்பரம் மாநகர பொருளாளர் வ. விஜயரங்கன் ஆகியோரும் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள் இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் பகுதி ஒன்றிய கழக நிர்வாகிகள் வட்ட கிளைக் கழக செயலாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மாநில மாவட்ட மாநகர கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 10 பூத்து ஒருங்கிணைப்பாளர்கள் 442 வாக்குச்சாவடிகளில் நியமனம் செய்யப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(BLA2) உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் இக்கூட்டத்தில் செம்பாக்கம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன் நன்றி கூறுகிறார்.

எனவே கூட்டத்தில் பல்லாவரம் வடக்கு பகுதி கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பல்லாவரம் தெற்கு பகுதி கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் கழகத் நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை இ.எஸ்.பெர்னார்ட் ஆகியோர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.